தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.09.2022 முதல் 21.09.2022)

அறிக்கை எண்: 74/2022 தேதி: 16.09.2022

## பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ ஆகவும் பதிவானது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.09.2022 முதல் 21.09.2022)

| கடந்த வார வானிலை (13.09.2022 முதல் 15.09.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (17.09.2022 முதல் 21.09.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/09 | நாள்-2 14/09 | நாள்-3 15/09 | தேதி | நாள்-1 17/09 | நாள்-2 18/09 | நாள்-3 19/09 | நாள்-4 20/09 | நாள்-5 21/09 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 3 | 4 | 0 |
| 36 | 36 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 25 | 25 | 25 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 26 | 26 | 25 |
| 4 | 4 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 4 | 5 | 5 | 4 |
| 63-50 | 82-48 | 72-49 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-55 | 70-55 | 70-60 | 70-60 | 70-50 |
| 8 | 8 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 8 | 8 |
| தென் தென் மேற்கு | தெற்கு | வட மேற்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 19.09.2022 மற்றும் 20.09.2022 வரை மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | நெல் நடவு செய்ய நிலத்தை தயார் செய்யும் போது ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இடவும். |
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | நாற்றங்கால் | நெல் நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டி.ஏ.பி மேலுரமாக இடவேண்டும். நெல் நாற்றங்காலில் இலைப்பேனை தவிர்க்க விதைத்த 10 நாட்களுக்குள் அசார்டிராக்டின் 0.03 சதம் (3 மி.லி/லி) ஒட்டும் திரவமான காதி கோபுர பார் சோப் 3 கிராம் / லி என்ற அளவில் கலந்து நாற்றங்கால் நன்கு நனையும் படி கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளித்தல் அவசியம். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயில் உலர்த்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்தில் இருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

நெல் நடவு செய்ய நிலத்தை தயார் செய்யும் போது ஏக்கருக்கு 5 டன் தொழு உரம் இடவும்.

**இயக்குநர்**